Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 173

வியாழக்கிழமை 18 மே 2023

வைகாசி 04 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## வெளிநாடு தப்பமுயன்ற 11 தமிழர்கள் கைது

கொழும்பு, மே 18
போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து ஜோர்ஜியா செல்ல முயற்சித்த கிராம அலுவலர் உட்பட 11 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து »11

வடக்கில் மகாவலி அதிகாரசபையின் அடுத்தகட்ட ஆட்டம்

# தமிழர் காணிகளை விழுங்க ‘ஜே’ வலயம் உருவாக்கம்!

### துணுக்காய், மாந்தை கிழக்கு மற்றும் மாந்தை மேற்கில் 30க்கும் அதிகமான கிராம அலுவலர் பிரிவுகள் கபளீகரம்


முல்லைத்தீவு, மே 18
மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் 'ஜே' வலயத்தினுள் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுகளும் மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவும் உள்வாங்கப்பட்டுள்ளதாக கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக »11

மாறாத வடுவாக...



## முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை; அனைவரும் இன்று நினைவேந்துக!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு



மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு ஊர்தி நேற்று முல்லைத் தீவைச் சென்றடைந்தது. (எ-113)

யாழ்., மே 18
முள்ளிவாய்க்கால் மே 18 தமிழினப் படுகொலை நினைவேந்தல் இன்று கடைப்பிடிக்கப்படும் நிலையில், வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்து அரச திணைக்களங்கள், அரசசார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்கள், வங்கிகள், சந்தைகள், தனியார் கல்வி நிலையங்கள், உயர் கல்வி »11

முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலை

# தமிழர் தாயகமெங்கும் இன்று நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 18
தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாகத் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 14ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று தமிழர் தாயகப் பரப்பிலும், புலம்பெயர் தேசங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளது. முதன்மை நினைவேந்தல் இறுதிப் போரின் சுவடுகளை தாங்கியுள்ள முள்ளிவாய்க்காலில் நடைபெறவுள்ளது. முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் முற்பகல் 10.29 மணிக்கு மணி ஒலியுடன் ஆரம்பமாகும் என்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழு தெரிவித்தது. »11

## கொழும்பிலும் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 18
முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் 14ஆம் ஆண்டு »11

## கடைகளை அடைத்து உறவுகளுக்கு அஞ்சலி

கிளிநொச்சி, மே 18
முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் இன்று கடைப் »11

## வடக்கு ஆளுநர் உட்பட மூவர் நேற்றுப் பதவிப் பிரமாணம்

கொழும்பு, மே 18
வடக்கு, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களுக்கான புதிய ஆளுநர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து »11

## சேதங்களை ஏற்படுத்தாதவாறு வெடுக்குநாறிமலையில் வழிபாடு

வவுனியா நீதிமன்றம் அனுமதி

வவுனியா, மே 18
வெடுக்குநாறிமலை ஆலயத்தில் தொல்பொருள் சின்னங்களைச் சேதமாக்காதவாறு எளியமுறையில் வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் என்று வவுனியா »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அரகலய போராட்டத்தின்போது

# சவேந்திரசில்வா என்னிடம் ஆலோசனை கேட்டது உண்மை

### பொன்சேகா தெரிவிப்பு



**கொழும்பு, மே 18**

**மக்கள் போராட்டத்தின்போது இராணுவத் தளபதியாக சவேந்திரசில்வா என்னிடம் ஆலோசனை பெற்றது உண்மைதான். அப்போது மக்கள்மீது துப்பாக்கிச்சூடு நடத்தவேண்டாம் என நான் அறிவுறுத்தல் வழங்கினேன். -இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

அரகலய போராட்டத்தை அமெரிக்கத் தூதுவரும், சரத்பொன்சேகாவுமே வழி நடத்தியதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ குற்றச்சாட்டுக்கள் முன்வைத்திருந்த நிலையில் சரத்பொன்சேகா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாடாளுமன்றவளாகம் சுற்றிவளைக்கப்பட்ட தருணத்தில் சவேந்திரசில்வா இரு தடவைகள் என்னுடன் கதைத்தார். போராட்டத்துடன் எனக்குத் தொடர்பு இருந்தது. நான் நாடாளுமன்ற உறுப்பினரும்கூட. எனவே, நாடாளுமன்ற உறுப்பினருடன் கதைப்பதற்கு பாதுகாப்புத் தரப்பினருக்குத் தடை இல்லை. அத்துடன், நான் இராணுவப் பிரதானியாக இருந்தவன். அந்தவகையில் கதைத்திருக்கலாம்.

மக்கள்மீது துப்பாக்கிச்சூடு நடத்த வேண்டாம். முடியுமென்றால் அரசியல் வாதிகளை வெளியேற்றுங்கள். உங்கள் பாதுகாப்பையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். பாதுகாப்புத் தடையை மக்கள் உடைத்தால்கூட சுடவேண்டாம். அரசியல்வாதிகளை அங்கிருந்து வெளியேற்றுவதுதான் சிறந்தது என நான் ஆலோசனை வழங்கினேன்.

இராணுவத் தளபதி கவலையுடன்தான் அப்போது இருந்தார். அவரின் வீடும் அங்குதான் இருந்தது. என்னிடம் மட்டுமல்ல ஏனைய இராணுவத் தளபதிகளிடமும் ஆலோசனை பெறும் உரிமை அவருக்கு உள்ளது. அதில் தவறு கிடையாது - என்றார். (ஒ-44)

## பயணத்தடை விதிக்கப்பட்ட நிலையில்

# போதகர் ஜெரோம் பெர்னாண்டோ ஞாயிறன்று இலங்கை வருகிறார்!

பௌத்த மதம் தொடர்பிலும், புத்தர் தொடர்பிலும் சர்ச்சைக்குரிய கருத்துக்களைப் பகிர்ந்த போதகர் ஜெரோம் பெர்னாண்டோ, நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில் அவர் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்குத் திரும்பவுள்ளார்.

தன்னை இறைதூதர் என்று அடையாளப்படுத்திய ஜெரோம் பெர்னாண்டோ, புத்தரைக் குறித்துப் பல்வேறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். 'புத்தர் ஞானம் பெற்றார். ஆனால், அவர் ஒளியைத் தேடினார். நானே ஒளி என்று இயேசு தெரிவித்துள்ளார். ஆதலால் புத்தர் தேடிய ஒளியாக இயேசுவே இருந்தார்' என்பது ஜெரோம் பெர்னாண்டோவின் கருத்தின் சாராம்சமாக அமைந்துள்ளது. இதையடுத்து அவருக்கு எதிராக, நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, ஜெரோம் பெர்னாண்டோ நாட்டை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டது. ஆனால், தடைக்கு முன்பாகவே அவர் சிங்கப்பூருக்குப் பயணமாகிய நிலையில், தற்போது அவர் இலங்கைக்குத் திரும்பவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜெரோம் பெர்னாண்டோ தனது சமூக ஊடகத்தில், 'வணக்கம் குடும்பத்தினரே, நீங்கள் அனைவரும் அறிந்ததுபோல, நான் முன்பு திட்டமிடப்பட்ட அதிகாரபூர்வ பயணங்களில் ஈடுபட்டு வருகிறேன், ஞாயிற்றுக்கிழமை நாடு திரும்புவேன்' என்று தெரிவித்துள்ளார். (ம-6)

# தமிழர் தாயகத்தில் பொதுவாக்கெடுப்பு!

### ஜனாதிபதியிடம் விக்கினேஸ்வரன் பரிந்துரை

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவேண்டும். இதன்மூலம் தமிழ் பேசும் மக்களின் மனங்களிலுள்ள உண்மையான எண்ணங்களை அறிந்துகொள்ளமுடியும் என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இலங்கைவாழ் தமிழ்மக்கள் கடந்தகால அரசாங்கங்களுடன் சுமார் 70 வருடங்களுக்கும் மேலாகப் பேச்சு நடத்திவருகின்றனர். இப்போது தமிழ்மக்களின் தேவை என்ன என்பது குறித்து அரசாங்கம் அறிந்திருக்கவேண்டும். சுமார் 3 ஆயிரம் வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் தமிழ்மொழியைத் தொடர்ச்சியாகப் பேசுபவர்கள் என்ற ரீதியில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ்பேசும் மக்கள் சர்வதேச பிரகடனங்களின் சரத்துக்களுக்கு அமைவாகத் தாம் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்பதை நன்கறிவர்.

இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் அரசமைப்பின் ஊடாக சமஷ்டி முறையிலான பரவலாக்கத்தையே வலியுறுத்தி வந்திருக்கின்றன. இதுகுறித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் மனதிலுள்ள உண்மையான எண்ணங்களை வெளிக்கொணர முடியும் என்பதுடன், அவை பெரும்பான்மையின மக்களுக்கு உவப்பற்றதாக இருக்கக்கூடும்.

எமது மக்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்டுவரும் ஒடுக்குமுறைகள், மீறல்கள் என்பன அரசுக்கு எதிராகத் திரும்பக்கூடும். இவ்வாறானதொரு சூழ்நிலையில் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படுவதுடன் அரசமைப்பின் ஊடாக தமிழ்மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நன்மைகள் அவர்களுக்குக் கிடைக்கப்பெறவேண்டும்' - என்றார். (ம)

# வெள்ளைவான் புரளியால் நொருக்கப்பட்ட வாகனம்!

### பொருள் கொள்வனவுக்குச் சென்றோர் மீது கிளிநொச்சியில் வெறித்தனமான தாக்குதல்

வெள்ளை வான் அச்சத்தால், பொருள் கொள்வனவுக்கு வந்த மூவர் மீதும் காட்டுமிராண்டித்தனத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. தாக்குதலில் மூவர் காயமடைந்தனர்.

கிளிநொச்சி வை.எம்.சி.ஏ. வீதிக்குப் பொருள்களை ஏற்றச் சென்ற வாகனத்தின் மீதும், அதில் பயணித்தவர்கள் மீதுமே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலில் வாகனம் கடுமையாகச் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். மூவர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில், அவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களிடம் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில், அவர்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காகச் சென்றுள்ளனர் என்றும், அவ்வாறு சென்ற இடத்தில், அவர்கள் ஆட்கடத்தல்காரர்கள் என்று தவறுதலாக அர்த்தப்படுத்தப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வடமாகாணத்தில் கடத்தல் முயற்சிகள் ஓரிரு இடங்களில் பதிவாகியுள்ள நிலையில், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருப்பது நல்ல விடயம். ஆனால், அப்பாவிகள் தாக்கப்படவோ அல்லது அவர்களின் உடமைகள் சேதப்படுத்தப்படவோ கூடாது. ஆதலால், பொதுமக்கள் தங்களுக்கு எவர் மீதாவது சந்தேகம் ஏற்பட்டால் அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்குவதன் மூலம் இவ்வாறான அசம்பாவிதங்களைத் தவிர்க்க முடியும் என்று பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (ம)

# பாதுகாப்புச் சீர்திருத்தங்கள்: இலங்கை சிறப்புக் கவனம்!

கொழும்பு, மே 18

இராணுவத்தின் எண்ணிக்கையைப் பேணி, அவர்களைப் பாரம்பரிய கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலாளர் அப்ரீன் அக்தருடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் சீர்திருத்தங்கள் தொடர்பாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் அமெரிக்க பிரதி உதவிச் செயலாளர் அக்தரிடம் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான இராணுவ மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான புதிய வழிமுறைகள் குறித்தும் இருவரும் கலந்துரையாடியுள்ளனர். (ம)

# வவுனியா பாடசாலையொன்றில் மாணவியைக் கடத்த முயற்சி!

### தப்பிவந்த மாணவி ஆசிரியரிடம் ஒப்படைப்பு

வவுனியா - இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் மூன்றாம் தரத்தில் கல்வி கற்கும், மாணவியொருவரைக் கடத்த முயற்சிக்கப்பட்ட நிலையில், அவர் பத்திரமாக மீட்கப்பட்டு ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பாடசாலை முடிவடைந்த நிலையில், பெற்றோருக்காக காத்திருந்த அந்த மாணவியை மர்ம நபரொருவர் அழைத்துச் சென்றுள்ளார். இதையடுத்து மாணவி சுதாகரித்துக் கொண்டு தப்பிவந்து பிறிதொருவரிடம் நடந்தவற்றைக் கூறியுள்ளார். இதையடுத்து அந்த மாணவி ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். இதன் உண்மைத்தன்மை தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடூர போர்க்குற்றங்களை மழுங்கடிக்க அரசு முயற்சி

## மனிதஉரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மே 18**

**இலங்கையில் நிகழ்ந்த 26 ஆண்டுகால உள்நாட்டுப் போரின் போதும் அதற்குப் பின்னரும் நடந்த பாரதூரமான மனிதஉரிமைகள் மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்களுக்கு இதுவரை நீதி கிட்டவில்லை. மாறாக படைகள் செய்த அட்டூழியங்களை மூடிமறைக்க இலங்கை அரசு முயல்கிறது - இவ்வாறு மனிதஉரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கையொன்றை வெளியிட்டு சுட்டிக்காட்டியுள்ளது.**

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் நெருக்கடிக்கு பொறுப்புக்கூறல் அற்றதன்மை, இழிவான பல்லினத்தன்மை மற்றும் மனிதஉரிமை மீறல்கள் ஆகியவையே காரணமாக அமைகின்றன.

2009 இல் முடிவடைந்த நாட்டின் கொடூரமான உள்நாட்டுப் போர் முடிவடைந்து 14 ஆண்டுகள் கடக்கின்றன. இன்னமும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. மாறாக இலங்கை அரசு தனது படைகள் செய்த அட்டூழியங்களை மறுத்து வருகிறது.

மோதலின்போது சித்திரவதை, சட்டத்துக்குப் புறம்பான கொலைகள், பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் உள்ளிட்ட எண்ணற்ற உரிமை மீறல்கள் நிகழ்ந்துள்ளன. சரணடைந்த போராளிகள் மற்றும் ஆதரவாளர்கள் எனச் சந்தேகிக்கப்படுவர்கள் சட்டத்துக்குப் புறம்பாக கொல்லப்பட்டனர் - காணாமல் ஆக்கப்பட்டனர்.

காணாமற்போனோரைக் கண்டறிவதற்காக அமைக்கப்பட்ட காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் எந்த முன்னேற்றமும் அடையவில்லை. போரில் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களுக்கு உண்மை, நீதியை வழங்குவதைத் தவிர்க்கும் முயற்சியே மேற்கொள்ளப்படுகிறது.

அத்துடன் தமிழர்களுக்குச் சொந்தமான அல்லது இந்துக் கோயில்களை ஆக்கிரமித்து தமிழரின் இனப்பரம்பலை - தொன்மையை கேள்விக்குள்ளாக்கும் சதிவேலைகளும் தொடர்கின்றன.

இலங்கையின் மனிதஉரிமைகளை உறுதிப்படுத்த போர்க்குற்றங்கள், இனப்படுகொலை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் - பொறுப்புக்கூறலை நிலைநாட்ட வேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

### இரசாயனக்குண்டு பிரயோகம்

# கரிக்கட்டைகளாக கருகி மடிந்த மக்கள்

## முன்னாள் மருத்துவ போராளி விவரணம்

யாழ்ப்பாணம், மே 18

2009 ஆம் ஆண்டு நிகழ்ந்த இறுதிப்போரில் இலங்கை இராணுவத்தினரால் இரசாயனக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டு பொழிந்த குண்டுத்தாக்குதலில் மரம் கருகிகரிக்கட்டையாக விழுவதைப் போன்று மக்கள் கருகிச் சுருண்டனர். 14 ஆண்டுகள் கடந்து இராசயனக் குண்டுகளின் தாக்கம் இன்னமும் மறையவில்லை - இவ்வாறு முன்னாள் மருத்துவத்துறை போராளியொருவர் தன் கண்முன்னே கண்ட காட்சிகளை சர்வதேச ஊடகமொன்றுக்கு விவரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விடுதலைப்புலிகளுக்கு சிகிச்சைகளை வழங்கும் சுகாதாரப் பிரிவில் மருத்துவப் போராளியாக கடமையாற்றியுள்ளேன். போராட்டக் காலத்தில் நேரடியாக நான் முன் நிற்கவில்லை. ஏனென்றால் களத்துக்குப் பின்னால் காயப்பட்ட போராளிகளுக்கான மருத்துவ சிகிச்சைகளை செய்து அவர்கள் உயிரைக் காப்பாற்றிய அனுபவமே இருந்தது. இறுதி யுத்தத்தில் வேறொரு பிரிவுக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஓர் இடத்தில் போராளிகளும் பொதுமக்களும் ஒன்றாகத் தான் சேர்ந்து பங்கரில் இருப்போம். சிறு பிள்ளைகளை பங்கருக்குள் அமர்த்திவிட்டு, வெளிப்பகுதியில் நாங்கள் இருப்போம். இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் முள்ளிவாய்க்கால் இறுதிப்போரின் மே மாதம் 10 ஆம் திகதி நான் பங்கர் ஒன்றின் வெளிப்புறத்தில் அமர்ந்திருந்தேன். இதன்போது இலங்கை இராணுவத்தால் பொஸ்பரஸ் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. மரம் கருகி கரிக்கட்டையாக விழுவதைப் போன்று மக்கள் கருகி இறந்து கிடந்தனர். அவர்களை சென்று தொட்டுப் பார்த்தால் கரிக்கட்டை மட்டும்தான் இருந்தது.

இவ்வாறான பயங்கரமான இரசாயனக் குண்டுத் தாக்குதலை நடத்தித் தான் இராணுவம் இறுதிப்போரில் எமது மக்களை அழித்தது. பொஸ்பரஸ் குண்டுத் தாக்குதலில் ஏற்பட்ட வெப்பத்தின் காரணமாக எனது கையின் ஒரு பகுதி கருகியது. இப்போதும் உடலின் ஒரு பக்கம் முழுவதும் வெள்ளைச் சதையாகவே உள்ளது. அந்தக் குண்டு என்னை நேரடியாகத் தாக்கவில்லை. அதன் வெப்பம் மட்டும் தான் என்னைத் தாக்கியது. ஆயின் அதன் நேரடித் தாக்கம் எவ்வாறு அமையும் என்பதை நினைத்துப் பார்க்க இயலாது. வாழ்வில் இறுதிப்போர் மறக்க முடியாததொன்று - என்றார். (ச-இ)

## மே 18 நினைவேந்தலை முன்னெடுத்தவர் கைது!

மட்டக்களப்பு , மே 18

இறுதிப்போரில் கொல்லப்பட்ட மக்களை நினைவுகூரும் மே 18 நினைவேந்தல் நிகழ்வில் ஈடுபட்ட ஒருவரை மட்டக்களப்பு பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்புரிமை அமைப்பான அகம் மனிதாபிமான வள நிலையத்தால் மே 18 நினைவேந்தல் ஒழுங்கமைக்கப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்ட குறித்த நினைவேந்தலில் மட்டக்களப்பு - வவுணதீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட நரிப்புல்தோட்டம் கிராமத்தில் உயிர்நீத்தோருக்கு அஞ்சலி மற்றும் கஞ்சி வழங்கல் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

அங்கு வருகை தந்த பொலிஸாரும் புலனாய்வுத் துறையினரும், நிகழ்வு ஏற்பாட்டாளரான மனிதாபிமான வள நிலைய உத்தியோகத்தர் பத்மநாதன் சிரோஜன் என்பவரை விசாரணைக்காக கைது செய்து அழைத்துச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)




**முட்டையில மயிர் பிடுங்கிறமாதிரி முள்ளிவாய்க்கால் கஞ்சியில உப்பு தேடுற விளையாட்டு இப்ப தொடங்கியிருக்கு. முள்ளிவாய்க்கால் கஞ்சி எண்டது கடைசிச் சண்டையில சனத்துக்கு சாப்பிட ஒண்டுமில்லாத நேரத்தில அங்க இருந்த அரிசியை வைச்சு இயக்கமும், சில அமைப்புகளும் கஞ்சி காய்ச்சிக் குடுத்தவை. அப்ப கையில என்ன ஏப்பிடுதோ அதை வைச்சுத்தான் இந்தக் கஞ்சியைக் காய்ச்சினவை.**

**முதல் கொஞ்சநாள், தேங்காய்ப்பாலுக்கு பதிலா அங்கர் போட்டு, உப்பெல்லாம் விட்டுத்தான் கஞ்சி காய்ச்சுப்பட்டுது. போகப் போகத்தான் சாமான்கள் எல்லாம் இல்லாமல்போக. உப்பிருந்தால் உப்புமா இருந்தால் மா எண்டு அரிசியோட தண்ணியைவிட்டு காய்ச்சிக் குடுத்தவை. மற்றும்படி முள்ளிவாய்க்கால் கஞ்சி எண்டால் உப்பில்லாமல்தான் காய்ச்சவேணும் எண்டு எந்தக் கட்டுப்பாடும் அங்க இருக்கேலை. சனத்தின்ர உயிரைக் காப்பாத்த, பசியைப் போக்க ஒரு சாப்பாடு செய்தால் சரி எண்ட மனநிலைதான் அப்ப இருந்தது. அந்தச் சண்டைக்களத்தில சனமும் கஞ்சிக்குள்ள உப்பிருக்கா, புளியிருக்கா எண்டு பாக்கிற மனநிலையில இருக்கேலை. என்னபாடு பட்டாவது உயிரைக் கையில பிடிச்சு வைச்சிருந்தாக் காணும் எண்டுதான் எல்லாரும் இருந்தவை.**

**ஆனால் அந்தநேரத்தில சனத்தைக் கைவிட்டுட்டு பத்திரமா ஒளிச்சிருந்த சில அரசியல் வாதியளும், அவையின்ர அடிப்பொடியளும் கம்பஸ் பெடியள் முள்ளிவாய்க்கால் கஞ்சிக்க உப்பு போட்டுட்டாங்கள் எண்டு வானத்துக்கும் பூமிக்கும் குதியாய்க் குதிக்கினம். வழமையைவிட இந்தமுறை எல்லா இடமும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரவலாக குடுபட்டதுக்கும், அதைப்பற்றி சனம் -குறிப்பா எங்கட இளைய தலைமுறை- அறிஞ்சு கொள்ளுறதுக்கும் காரணம் கம்பஸ் பெடியள் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சிக் குடுக்கத் தொடங்கினதுதான். அதைப்பார்த்திட்டுத்தான் மற்றவையும் குடுக்கத் தொடங்கினவை.**

**முள்ளிவாய்க்கால் கஞ்சி எண்டது சும்மா போகிற போக்கில ஒரு பொழுதுபோக்குக்காக குடிச்சிட்டுப் போற கஞ்சி இல்லை. அதைக் குடிக்கிற ஒவ்வொருத்தருக்கும் அது தொண்டைக்குள்ள இறங்கேக்க, எங்கட சனம் முள்ளிவாய்க்காலில கடைசிநேரம் பட்ட வலி,பசி எல்லாத்தையும் ஓரளவுக்கெண்டாலும் உணர ஏலும். அப்பிடி ஒருதூண்டலுக்கும், சாப்பாட்டைக்கூட ஒரு நினை வேந்தல் ஆயுதமாப் பாவிக்காலம் எண்டதுக்காகவும் தான் முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சுப்பட்டு சனத்துக்கு குடுபடுகுது. அந்த உயிர்க்கஞ்சியில மயிர் பிடுங்காமல் இருக்கிறதுதான் எங்கட சனம் கடைசிக்காலத்தில பட்ட கஷ்டங்கள், வேதனையள், வலியளுக்கு நாங்கள் குடுக்கிற மரியாதையா இருக்கும்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியாவில் வேலை இலங்கையருக்கும் வாய்ப்பு

வேலைவாய்ப்புக்காக வெளிநாட்டவர்களை உள்வாங்கும் திட்டத்தை அவுஸ்திரேலிய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் வெளிநாட்டு தொழிலாளர்களைத் திரட்டுகிறது.

இந்தத் திட்டத்தில் இலங்கையர்களும் உள்வாங்கப்படவுள்ள நிலையில் திறமையான இலங்கையர்கள் விண்ணப்பிக்கலாம் என மெல்போர்னிலுள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

தகுதியுடைய ஆர்வமுள்ள இலங்கையர்கள் https://www.smartmoveaustralia.gov.au எனும் இணையத்தளத்தினுள் பிரவேசித்து விண்ணப்பிக்க முடியும் என தூதரகம் மேலும் குறிப்பிட்டது. (ச-6)

## மரண அறிவித்தல்

### அமரர் நாகமுத்து குணரத்தினம்



தோற்றம் 30.03.1944 — மறைவு 16.05.2023

கம்பர்மலை வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும். நாச்சிமார் கோவிலடி. யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து குணரத்தினம் (வெல்கம் முதலாளி) அவர்கள் கடந்த (16.05.2023) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து அன்னமுத்து தம்பதியரின் மூத்த புதல்வனும். காலஞ்சென்ற ஆழ்வார் கந்தையா மனோன்மணி தம்பதியரின் மூத்த மருமகனும். காலஞ்சென்ற திருமதி நகுலேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும். குணசேகர். குணேஸ்வரி. சசிகலா ஆகியோரின் அன்புத் தந்தையும். மதிவதனராணி. ஜீவகாந்தன். பிறேமதாஸ் ஆகியோரின் மாமனாரும். நவரத்தினம். சிவலிங்கம். ரஞ்சிதமலர். புவனேஸ்வரி. காலஞ்சென்ற சோதிலிங்கம். இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு அண்ணனும். ஜெயமணி. யசோதா. டெய்சிராணி. நவமணி ஆகியோரின் மைத்துனரும். ரேதுகா. சயந்தினி. ரேமதா. கிஷோர். கஜானி. லிவேக்கா. மேனுகா. சீனுசா. தேனுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2023) வியாழக்கிழமை இல.978. K.K.S. Road. நாச்சிமார் கோயிலடி. யாழ்ப்பாணம் அவரது இல்லத்தில் நடைபெற்று. மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாச்சிமார் கோவிலடி.

தகவல்: மகள் - மருமகன்

(CS 24891)A-1

## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 21 . 06 . 1933 — இறைவன் அடியில் 17 . 05 . 2023

### திரு.கந்தையா திருவிளங்கம்

(ஓய்வுபெற்ற பிரதம எழுதுவினைஞர் - கச்சேரி - யாழ்ப்பாணம்) சமாதான நீதவான்

அர்ராலி தெற்கு களவத்துறை ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.கந்தையா திருவிளங்கம் அவர்கள் நேற்று (17.05.2023) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற அன்னம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், சின்னம்மா, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருள்மொழி, அன்பழகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆதவகுமாரன், பவானி ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கீத்தின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.05.2023) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூனாவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

களவத்துறை,
அராலி தெற்கு, அராலி.

தகவல்: அன்பழகன் (மகன்)
076 0061 3844
077 541 3848

## நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலைய 48ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி [Open]

20.05.2023 சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி ஆரம்பமாகும்.

**போட்டி ஆரம்பமாகும் இடம்:**

**நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலையம்.**

பங்குபற்ற விரும்புவோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். பதிவுக்கட்டணமாக ரூபா 1000/= அறவிடப்படும்.

நாளை (19.05.2023) வெள்ளிக்கிழமை முன்பாக தங்களது பதிவை மேற்கொள்ளவும்.

**21.05.2023 ஞாயிறு மாலை 6.00 மணிக்கு இலங்கையின் முன்னணி இசைக் கலைஞர்களின் (வவுனியா இசை அமுதனின்- 077 076 0816) ஸ்ரார் ஞானசுருதி இசைக்குழுவினரின் இன்னிசைக் கானங்கள்** இடம்பெறும். அனைத்து ரசிகர்களையும் அன்பாக அழைக்கின்றோம்.

கலைவாணி சனசமூக நிலையம்
நாவாந்துறை.


தலைவர் - 076 3069 843
வி.தலைவர் - 077 382 3738

(CS 24896)A-1

## மரண அறிவித்தல்

### உயர்திரு சி.கா. திருச்செல்வம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் யா/ கிறிஸ்தவ கல்லூரி, கோப்பாய்)



மண்ணில் 19.06.1933 — விண்ணில் 17.05.2023

கோப்பாய் வடக்கு கட்டுபிளானைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட உயர்திரு சின்னத்தம்பி கார்த்திகேசு திருச்செல்வம் நேற்று (17.05.2023) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு செல்லம்மா தம்பதியரின் தவப்புதல்வரும் சுதுமலையைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பையா வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும். சின்னாச்சிப்பிள்ளையின் (ஓய்வு பெற்ற ஆசிரியை. யா/ கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்) அன்புக் கணவரும். சுமதி. சுரேஸ்குமார் (புள்ளிவிபரவியலாளர். புள்ளிவிபரத் திணைக்களம் - கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும். இந்திரகுமாரியின் (ஆசிரியை. கொ/இந்துக் கல்லூரி) அன்பு மாமனாரும். சு.கஜானேஷ் (கொ/றோயல் கல்லூரி) இன் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2023) பிற்பகல் 1.00 மணியளவில் கோப்பாய் மத்தியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கோப்பாய் கந்தன்காடு மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"குமரபதி", கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
தொ.இல:071 803 9864

தகவல்: கா.தி.சுரேஸ்குமார் (மகன்)

(CS 24899)A-1

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வலட்சுமி ஜெயரஞ்சிதன்



தோற்றம் 07.11.1949 — மறைவு 17.05.2023

மலேசியாவை பிறப்பிடமாகவும் சங்கரத்தை வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வலட்சுமி ஜெயரஞ்சிதன் நேற்று (17.05. 2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் ஜெயரஞ்சிதன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு நாகம்மா தம்பதியரின் ஆசை மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சண்முகநாதன், பாக்கியம் சேனாதிராசா, பரமநாதன், அருமைநாதன், பஞ்சலிங்கம், மகாலிங்கம், நாகலிங்கம், நவரத்தினம் ஆகியோரின் இளைய சகோதரியும், மனோரஞ்சிதன், காலஞ்சென்ற வதனா பத்மநாதன் மற்றும் தவம் தங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நவாலி வீதி, சங்கரத்தை
வட்டுக்கோட்டை.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 24897)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## அஞ்சலிக்க அஞ்சோம்!

இன்று மே 18. தமிழர் தேசத்தின் இதயத்துடன் இரண்டறக் கலந்துவிட்ட – ஆத்மார்த்தமானதும் மிகக் கனதியானதுமான நாள்களில் முதன்மையானதும் தவிர்க்க முடியாததுமான நாள். 13 ஆண்டுகளுக்கு முன்னர் இன்றைய நாளில்தான் முள்ளிவாய்க்கால் குருதிச் சகதிக்குள் சின்னாபின்னமானது. தன் சொந்த நாட்டு மக்களையே, சர்வதேச போர்க்குற்றங்களை மீறியும், நியாயமான போரியல் நடவடிக்கைகளுக்குப் புறம்பாகவும் லட்சக்கணக்கில் கொன்றொழித்த உலகின் மோசமான இழிசெயல் நிகழ்ந்து இன்றுடன் ஆண்டுகள் 14.

எங்கள் உயிருக்கு நிகராக உறவுகளின் அன்றைய வாழ்வியல் ஒரு மண்வெட்டி, சில உரைப்பைகள், நான்கு தடிகள் அவ்வளவே. பச்சிளம் குழந்தை முதல், தலைமுறைகள் கண்ட பாட்டி, பூட்டன் வரை கொத்துக்கொத்தாகச் செத்துமடிய அவர்களுக்கான இறுதிச் சடங்குகளைக்கூட ஆற்ற முடியாத ஆற்றாமையுடன்தான் தமிழினம் அன்று தன் உயிரைக் கையில் பிடித்தபடி பயணப்பட்டுக் கொண்டிருந்தது. முள்ளிவாய்க்கால் இறுதிக் கணங்களில் தமிழினத்தின் பயணம் வெற்றியையோ அல்லது தோல்வியையோ நோக்கி அமையவில்லை. உயிர்ப்பிழைப்பை நோக்கிய பறவைக்கூட்டமாகவே அவர்கள் நகர்ந்துகொண்டிருந்தனர். உயிர் வாழ்வதற்கான சிறு வாய்ப்பொன்று தமக்கு அமைந்துவிடாதா? என்பதுதான் அவர்களுக்கு அன்றிருந்த மொத்த அங்கலாய்ப்பும் ஏக்கமும்.

அந்த இனக்கூட்டம் உயிருடன் மீள்வதற்கான அத்தனை ஏதுநிலைகளும் சிங்களப் பேரினவாதத்தின் கொடும் கரங்களால் ஈவிரக்கமின்றி அழிக்கப்பட்டன. போரியல் முறைகளுக்குப் புறம்பாகவும், சர்வதேசத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட யுத்த நெறிமுறைகளுக்கு மாறாகவும் குருதியால் தோய்க்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்காலில் ஒரு சிறு துண்டு நிலத்தில் பல்லாயிரம் தமிழர்களின் உயிர்கள் பகடையாக்கப்பட்டிருந்தன. காலை உரையாடியவன் மாலை பிணமாகிக் கிடந்தான். விருந்தோம்பலில் உலகுக்கு நெறிமுறை காட்டிய தமிழினம் மாங்காயையும் தேங்காயையுமே மூவேளை உணவாகக் கொண்டிருந்தது. பல நாள்களில் அதுவுமில்லை. உமிக்குள் அரிசி தேடிய அவலமும் அங்கேதான் நடந்தேறியது. இத்தனைக்கும் சர்வதேசமோ கைகட்டி வாய்மூடி மௌனியாகவே இருந்தது.


இலங்கையில் 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிப் போரின் போதும், அதற்கு முன்னரும்கூட தமிழர்கள்மீது போர்க் குற்றங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இனப்படுகொலை இலங்கையில் இடம்பெற்றது என்பதை வெளிப்படையாக ஏற்றிருக்கின்றது ஐக்கிய நாடுகள்சபை. இதை ஒரு தீர்மானமாகவே நிறைவேற்றியிருக்கின்றது கனடா. ஆக, இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான தன் பிடியை இறுக்கக்கூடிய அத்தனை ஏதுநிலைகளும் ஐக்கிய நாடுகள் சபையிடம் இருக்கவே செய்கின்றது. எனினும், தமிழர்கள் மீதான இந்தப் படுகொலைகளுக்கு என்ன நீதியை ஐ.நா. வழங்கிவிட்டது? ஒரு தசாப்தம் கடந்த பின்னரும்கூட நீதியை நிலைநாட்டி ஆறாத ரணத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கும் ஈழத்தமிழர்களின் காயங்களுக்கு கொஞ்சமேனும் மருந்திடுவதற்கு என்ன பொறிமுறையை ஐ.நா. உருவாக்கியுள்ளது? இறுதிப்போரின்போது காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடுவதைப்போன்று, இந்தக் கேள்விகளுக்கான பதில்களையும் தமிழினம் தேடித்தேடிக் களைத்துப்போய்விட்டது.

தாமதமான நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமனாம் என்பர். சிங்களப் பேரினவாதமும் ஈழத்தமிழர்களும் இதற்கு ஆகப் பெரியதும் ஆகச்சிறந்ததுமான எடுத்துக்காட்டு. ஆனால், தமிழர்கள் இறுதிப்போரின்போது தமக்கு இழைக்கப்பட்ட குற்றங்களுக்குத் தக்க தண்டனையை உரிய தரப்பினர் அனுபவித்தே தீருவார்கள் என்ற அசையாத நம்பிக்கையை அப்போதும் இப்போதும் ஆணித்தரமாகக் கொண்டிருக்கின்றனர். அந்த நம்பிக்கைக்குக் காரணமாக இருப்பவை இரண்டு. ஒன்று இறை. மற்றொன்று வினை. அந்த இரு நம்பிக்கைகளும் இன்று வலுவாகவே எதிர்வினை ஆற்றிக்கொண்டிருக்கின்றன. எத்தனை தடைகள் வந்தாலும், வீரசேகர போன்ற கடைந்தெடுத்த இனவாதிகள் என்னதான் கொக்கரித்தாலும் எம் உயிருக்கு நிகரான உறவுகளை எம் உணர்வில் – உள்ளத்தில் – உயிரில் நிலை நிறுத்தி எப்போதும் அச்சமின்றி அஞ்சலித்துக்கொண்டே இருப்போம். அது மட்டும் மாறாது!

### நாளொரு நல்வார்த்தை

" உன்னுடைய வாழ்க்கைக்கு மூச்சு எவ்வளவு அவசியமோ , அப்படித் தான் உழைப்பும். உழைப்பின்றி வாழ்வதில் உற்சாகமில்லை "

– ஹாலி



# சிறுபான்மை மதத்தினர் மீது தொடர்ச்சியாகத் துன்புறுத்தல்!

## இலங்கை தொடர்பில் அமெ. அதிருப்தி

**கொழும்பு, மே 18**

**இலங்கையில் சிறுபான்மை மதத்தினர் மீது தொடர் துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அமெரிக்கா மத சுதந்திரம் குறித்த தனது வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதுடன், இது தொடர்பில் கடும் அதிருப்தியும் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அமெரிக்க இராஜாங்க அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:

2022ஆம் ஆண்டில் இலங்கையில் சிறுபான்மைமத மக்கள் தொடர்ச்சியாகத் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஜனாதிபதி பிரதமர் அமைச்சர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளுடனான சந்திப்பின் போது அமெரிக்கத்தூதரக அதிகாரிகள் மோதலுக்குப் பிந்திய நல்லிணக்கச் செயற்பாட்டின் ஒரு பகுதியாக இன மற்றும் மத சிறுபான்மையினத்தவர்களை மதித்து அவர்களை அரவணைப்பதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்தனர்.

சிறுபான்மை மதக்குழுக்களைச் சேர்ந்தவர்களைத் துன்புறுத்தல் அவர்களுக்கு எதிரான பாரபட்சம் குறித்த கரிசனைகளைத் தெரிவிப்பதற்காக அமெரிக்கத் தூதரக அதிகாரிகளும், மற்றும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க அதிகாரிகளும் இலங்கை அதிகாரிகளைச் சந்தித்து வலியுறுத்தியுள்ளனர். இந்தச்சந்திப்பின்போது, நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் குறிப்பாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பில். உரிய நடவடிக்கைகளை பின்பற்றவேண்டும் எனவும் அமெரிக்க அதிகாரிகள் வலியுறுத்தினர் - என்றுள்ளது. (அ-ம)

# இனப்படுகொலையாளிகள் அனைவரையும் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தவேண்டும்!

## சிவாஜிலிங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்கால் முடிவல்ல. இனப்படுகொலையாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமுமான எம்.கே.சிவாஜிலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தை முன்னிட்டு, சிவாஜிலிங்கத்தின் அலுவலகத்தில் நேற்றையதினம் அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் அரச படைகளாலும், சிங்களக் காடையர் குழுக்களாலும் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலைகளை முன்னெடுத்த குற்றவாளிகளைச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தி எமது மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்யவேண்டும் - என்றார். (ம-இ)

### நாளை

19.05.2023

வெள்ளிக்கிழமை

வைகாசி 05

சுபநேரம் : 05.52 - 07.22

ராகுகாலம் : 10.22 - 11.52

கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக்கம் தீருமா?

முள்ளி வாய்க்கால் முடிவானது
முதுசமொன்றின் அழிவானது
தமிழினம் தடுமாறியது
தப்புத்தாளங்களின் தளமானது.

சொல்லமுடியா வேதனைகள்
சோகம் ததும்பும் உணர்வலைகள்
ஏகாந்தப் பெருவெளியில்
ஏக்கமுறும் மானிடர்கள்.

மனிதப் படுகொலையின்
பேரவலம் சூழ்ந்தநாளில்
மரணித்த மக்களுக்காய்
மௌனத்தின் மொழிகளை
தூதாய் அனுப்பிடுவோம்.

வேரிழந்த மரமாய்
சிறகிழந்த பறவையாய்
உணர்விழந்த சடப்பொருளாய்
நாடிழந்த மனிதர்களாய்
நாம்வாழ்தல் கூடுமோ ?

வல்லரசுகளின் வழிநடத்தலில்
வாழ்விழந்தது தமிழினம்
சொல்லரிய சோதனைகளால்..
எல்லோரும் பரிதவித்தனர்.

முள்ளி வாய்க்காலில் முகம்தொலைத்த
வித்தான உறவுகளுக்கு
விண்ணதில் விழிகளில்இருத்தி
விரும்பியேநாம்அஞ்சலிப்போம்.

தாய்மண்ணை முத்தமிட்டு
நீள்துயில் கொண்டவர்கள்
ஏக்கம் தீருமா
ஏதிலிகள் ஆவோமா?

கிருஸ்ணவேணி சிங்கராயன்

















ஊழியின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ன் வலியில்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
27 . 09 . 1943

மறைவு
16 . 05 . 2023

## வெற்றிவேலு இரத்தினசிங்கம் (இரட்ணம்)

(ஓய்வுபெற்ற தபால் உத்தியோகத்தர்)

சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு இரத்தினசிங்கம் கடந்த (16.05.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - பூரணம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம் - இரத்தினம் தம்பதிகளின் மருமகனும், சந்திரேஸ்வரியின் அன்புக் கணவரும், பங்கஜன் (பிரான்ஸ்), அனுசியா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ். மருந்து வழங்கல் பிரிவு), யெனன் (முன்னாள் மாநகரசபை உறுப்பினர், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் - கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை), கயாளினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், உமா (பிரான்ஸ்), சிவரஞ்சன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - தென்மராட்சி), வர்சினி, பிரசாந்தன் (றீகல் Event) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சீவரத்தினம், நீலாம்பிகை, கமலாம்பிகை மற்றும் நவரத்தினராஜா, சிவராஜா (பிரான்ஸ்), சண்முகராஜா (ஜேர்மனி), நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற சபாநாதன் மற்றும் கமலாதேவி, வரதராஜா, சற்குணாதேவி (பிரான்ஸ்), சகுந்தலா, விக்னராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிகாஷி (பிரான்ஸ்), ஆபர்னா (பிரான்ஸ்), லேனா (பிரான்ஸ்), கோபிகன், பிரணவி, நவ்தீஸ், ஆதிரா, பிரஜினா, திவ்வியாசினி ஆகியோரின் பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2023) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**11/5, சந்தனமாதா ஒழுங்கை,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.** (CS/50456)AH-1

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த (20.04.2023) அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்


## அமரர் மயிலன் சிவலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.05.2023) வியாழக்கிழமை கீரிமலை புனிததீர்த்தக் கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியகிரியைகள் நாளைமறுதினம் (20.05.2023) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையி லும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கைதடி வடக்கு,**
**கைதடி.** (cs 50447) (N-1)

**குடும்பத்தினர்**
**077 859 1943**

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சின்னச்சாமிக் குருக்கள் சண்முகலிங்கம் ஐயர்

(பாபு அப்பா)

(ஆதீனகர்த்தா
ஸ்ரீவீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்)

**தோற்றம்** 15.01.1938 **மறைவு** 21.05.2020

**திதி: வைகாசி அபரபக்க சதுர்த்தசி**

ஆண்டுகள் மூன்று ஆனபோதும்
பறந்து சென்ற அன்பினைப் பிரிவதனால்
சோகம் என்னும் கடல் தனில் மூழ்கின்றோம்
எத்தனை எத்தனை பொழுதுகள்
இங்கு ஆன போதும்
எம் தலைவன் உங்களுக்கு
நிகர்தான் எதுவோ எம் வாழ்வில்
நீங்கள் இல்லாத எம்கோயில்
கொண்ட வீடு வெறிச்சோடி
நிம்மதி இன்றி தவிக்கின்றோம்
காலத்தின் தேவையும்
கடவுளின் கட்டளையும்
வீரமாகாளி அம்பாள் அடியில்
அன்னையுடன் அகமகிழ்ந்து
ஆனந்தமாக வாழ்வீர் என
ஆறுதலடைகின்றோம் அப்பா....!

**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**எம் அன்பு மலர்கள் காணிக்கை**

**உங்கள் பிரிவால் துயருறும்**

**இல.39, விநாயகர் வீதி,**
**நல்லூர் வடக்கு,**
**யாழ்ப்பாணம்.**

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி பஞ்சலிங்கம் சிவநேசம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பஞ்சலிங்கம் சிவநேசம் நேற்று (17.05.2023) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.க. பஞ்சலிங்கத்தின் அன்பு மனைவியும், சாந்தினி, சிறீதரன், வசந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற க.முத்துலிங்கம் மற்றும் செ.பாலசுப்பிரமணியம், அருட்செல்வி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், மகாதேவன், நடராசா, மகேஸ்வரி, பரமேஸ்வரி, கமலாதேவி, அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானரூபன், ஆதவன், வாகீஸ்வரன், சிவசுதன், சுதர்சனா, நிரஞ்சலா, லக்சாயினி ஆகியோரின் ப்ாசமிகு பேர்த்தியும், மகிதனா, பார்கவி, ஆத்மிகா, நிவேதிதா, தருண், ஆகாசனா, ஆதர்சிகா, அகன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (17.05.2023) புதன்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : ப.சிறீதரன்**

**உரும்பிராய் தெற்கு.** (CS/50452)AH-1 **076 144 1758**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்
மடத்துப் பிள்ளையார் கோவில் முன்பாக
2 1/2 நிலப்பரப்பு விஸ்தீரணமுடைய வீடு
மற்றும் கிணற்றுடனான ஆதனம்
விற்பனைக்குண்டு.

**076 560 8764, 075 829 0526**

## வேலையாட்கள் தேவை

ஊரெழுவில் அமைந்துள்ள என்வினி
உணவகத்திற்கு கொத்து, றைஸ் மற்றும்
ரொட்டி வேலை தெரிந்தவர்கள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தங்குமிட வசதி செய்து தரப்படும்.

**074 230 1234, 075 230 1104**

## அளவெட்டி மகாஜனசபையின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் மரதன் ஓட்டப் போட்டி

21.05.2023 அன்று நடைபெறவுள்ள அளவெட்டி மகாஜன சபையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அளவையூர் மைந்தன் அமரர் சின்னத்தம்பி நினைவாக நடத்தப்படும் 20 வயதிற்கு மேற்பட்ட, 20 வயதிற்கு உட்பட்டவர்களுக்குமான மரதன் ஓட்டப்போட்டி சனிக்கிழமை 20.05.2023 காலை 5.30 மணிக்கு அளவெட்டி மகாஜன சபை முன்றலில் இடம்பெற இருப்பதால் அதற்கான பதிவுகள் இன்றும் நாளையும் மகாஜன சபை முன்றலில் மாலை 3.00 மணி முதல் 6.00 மணிவரை இடம்பெறும். பதிவுக் கட்டணம்-300/= அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**செயலாளர்**
**அளவெட்டி மகாஜனசபை.**

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயாளி ஒருவருக்கு
**O+** குருதிவகையைச் சேர்ந்த
சிறுநீரகம் உடனடியாகத் தேவை.
50 வயதிற்குட்பட்டவர்கள்
விரும்பத்தக்கது.

**077 922 8803 / 077 654 4372**

## நூல் அறிமுக விழா

ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன் எழுதிய 'லண்டனில் இருந்து விமல்' எனும் பகிர்வுகளின் தொகுப்பு நூல் வெளியீடு யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் தலைமையில் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பிரதம விருந்தினராக கலந்துக்கொள்ளவுள்ளார்.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-ரி)



## இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோயில்

**விசேட பொதுக்கூட்டம்**

நாள்:- 21.05.2023 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:- காலை 10.00 மணி
இடம்:- ஆலய பல்சேவை மண்டபம்
தலைவர்:- திரு.ந.சிவகுமார்

**நிகழ்ச்சி நிரல்**

காலை 10.00 மணியளவில் அம்பாள் ஆலயத்தில் ஆராதனையுடன் ஆரம்பித்து அடியவர்கள் ஆலய பல்சேவை மண்டபத்துக்குள் அழைக்கப்படுவார்கள்.

01. மங்கல விளக்கேற்றல்
02. தேவாரம் ஓதுதல்
03. ஆசியுரை
04. தலைமையுரை
05. ஆலய பாலஸ்தானம் செய்தல் தொடர்பாக ஆராய்தல்
06. நன்றியுரை

**ஆலய அறங்காவலர் சபையினர்.**

" அம்பாள் அருள் அகிலம் ஆளும் "

## Centre for Digital Epidemiology (CoDE), Faculty of Medicine, University of Jaffna.

Temporary appointment

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned post for the Centre for Digital Epidemiology, Faculty of Medicine, University of Jaffna.

01. Centre Manager (01 post)

**Qualifications, experience and requirements:**

- A Bachelor's degree in Business Administration/Commerce or other equal qualification from UGC approved University / Higher Education Institution.
- Minimum 03 years post qualifying experience in health related project management in public service/corporation/statutory board or reputed institution.
- Ability to prepare the project's budgets, manage the team, maintain the official documents, organize the stakeholders' meetings, manage multiple tasks and meet the demands of a fast paced environment with changing priorities.

**Duties & Responsibilities:**

- Overseeing day to day operations.
- Developing and implementing policies for efficient operations.
- Managing Staff.
- Monitoring performance though key performance indicators.
- Communicating with stakeholders.
- Ensuring compliance with all relevant laws, regulations as well as any internal policies or procedures.
- Managing budgets.
- Planning and executing programmes.

**Remuneration:** A monthly salary of LKR 67, 400.00 will be paid

**General note**

- All selected candidate will be appointed on full-time basis for one year.
- Candidate should possess excellent language skills in Tamil and English
- Should be a citizen of Sri Lanka.
- Age should be not less than 18 years and not more than 35 years.
- All selected candidates will become a contributor to the Employee Provident Fund (EPF) and the Employee Trust Fund (ETF), the employee should contribute 8% of the monthly salary to the EPF and the employer will contribute 12% & 3% of the monthly salary to EPF & ETF respectively.

The Application forms downloaded from the University website should accompany with the paid Bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

Applicants are requested to send their applications with copies of the educational certificates and any other relevant certificates in proof of qualifications and experience via registered post to reach **Deputy Registrar/ Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna.** Applicants are requested to send the scanned copies of all the documents to the email address: fomvacancy@univ.jfn.ac.lk on or before Friday, 26th of May 2023.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications and applications received after the closing date will be rejected without intimation. The post applied for should be marked on the top left-hand corner of the envelope.
For further details, please refer to the University of Jaffna website - www.jfn.ac.lk

**Registrar**
**08.05.2023**

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகரசபை
## கழிவுப் பொருட்கள் ஏற்றுமதி

யாழ் மாநகரசபை ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் தரம் பிரிக்கப்பட்ட கழிவுப்பொருட்களை ஏற்றுமதி செய்யும் வழங்குனரிடமிருந்து யாழ் மாநகர சபை பெறுகைக் குழு தலைவரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பங்களை யாழ் மாநகரசபை, பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கேள்விப் படிவங்களை 18.05.2023 ஆம் திகதி முதல் 31.05.2023 ஆம் திகதி பி.ப 2.30 மணி வரையான காலப்பகுதியில் கடமை நாட்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 (வரி உள்ளடங்கலாக) பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். குறித்த சேவை தொடர்பான விபரங்களை அலுவலக நாட்களில் யாழ் மாநகரசபையின் பொதுச் சுகாதாரப் பொறியியல் பிரிவில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்களை 31.05.2023 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன்னர் தலைவர், பெறுகைக்குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது ஆணையாளர் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியினுள் இடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப்படிவங்கள் கேள்விச்சபையால் நிராகரிக்கப்படும்

கேள்வி திறத்தல் 31.05.2023 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

எந்தவொரு கேள்வியையும் நிராகரிக்கும் உரிமை கேள்விச்சபைக்குரியதாகும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**யாழ் மாநகரசபை,**

(CR/39862)AH-1

## மணிவிழா வாழ்த்து

எமது கல்லூரியின்
**அரசியல் விஞ்ஞான பாட சிரேஷ்ட ஆசிரியை**
## திருமதி சிவகுமாரி பேரின்பநாதன்
(B.A., P.G.D.E, SLTS - I)



**சேவைக் காலம்**

- யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
  11.01.1993 - 06.09.2011
- யா/ வரணி மத்திய கல்லூரி
  07.09.2011 - 24.01.2019
- யா/ சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி
  25.01.2019 - 17.05.2023)

Congratulations


எமது கல்லூரியின் அரசியல் விஞ்ஞான பாட சிரேஷ்ட ஆசிரியை திருமதி சிவகுமாரி பேரின்பநாதன் அவர்களின் சேவை நயந்து வாழ்த்துவதுடன் அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**வாழ்த்துவோர்:** **வட்டமேசை**
**யா/ டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி**

(cr39846) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் முன்னாள்
ஒய்வுநிலை தமிழ் பாட ஆசிரியரும்
பழைய மாணவனுமாகிய

## கலாநிதி
## கார்த்திகேசு திருப்பதி

அவர்கள் நேற்று முன்தினம் சிவபத மடைந்தமையிட்டு கல்லூரிச் சமூகம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களையும், இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்**
**தலைமையகம் - கோப்பாய்**
**யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

**தோற்றம்** 23.06.1958 **மறைவு** 16.05.2023

(CS 24894)A-1

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**மண்ணில்** 18 . 02 . 1944

**விண்ணில்** 09 . 06 . 2021

## இரத்தினம் கனகலிங்கம்

**(நல்லூர் ப.நோ.கூ.ச. ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர்)**

**திதி : 18.05.2023**

மீளாதுயில் கொண்டு எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திச் சென்றீரோ?
கலையாத நினைவுகளுடன் உதிரும்
கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய - எங்கள்
கண்ணீர் துளிகளை காணிக்கையாக்குகின்றோம்.

**விளையாட்டரங்க வீதி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

**குடும்பத்தினர்.**

(CS 24889) A-1

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சரஸ்வதி



**அன்னை மடியில்** 02.04.1945

**ஆண்டவன் அடியில்** 15.05.2023

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சரஸ்வதி அவர்கள் கடந்த (15.05.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும், பிறேமாவதி, பத்மாவதி, சிவகுமார், ஜமுனாவதி, காலஞ்சென்ற ஸ்ரீதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம், துரைராசா மற்றும் பரமேஸ்வரி, தர்மலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கந்தையா, சத்தியேந்திரன், ஷகிலா, ஜனார்த்தனன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஞானப்பிரசாத்- பிரபாகினி, ஜானஸ்காந் - ஜசிந்தா, ஷயந்தன் - கௌதமி, கீர்த்திகா, விஷ்ணுகன், கயேந்திரன், பகிசன், ஆராதனா, ஆதித்தன், ஓவியா, இனியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கிஷானிகா, வர்ஜித், சுவித், மிர்த்திஹன் ஆகியோரின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தகலட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிறுப்பிட்டி மேற்கு,**
**நீர்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்,**
**076 163 5430**

# ஆர்னோல்ட்டுக்கு நீதிமன்று பிணை

தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் வைத்து இடம்பெற்றது என்று கூறப்படும் கைகலப்புச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர முன்னாள் முதல்வர் ஆர்னோல்ட் நேற்றுக் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு, பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதிக் கிளைக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஆர்னோல்ட்டுக்கும் மற்றுமொரு உறுப்பினருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்துமோதல் முற்றிய நிலையில், ஆர்னோல்ட் மற்றையவர் மீது தாக்குதல் நடத்தினார் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் ஆர்னோல்ட் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுத்தப்பட்டார். வழக்கு விசாரணைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து ஆர்னோல்ட் ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். வழக்கு எதிர்வரும் 17ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(அ-ம-26,66)

# 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த (18.04.2023) அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

## அமரர் முருகப்பர் கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற இலங்கை போக்குவரத்துச் சபை நடத்துனர்- S.L.T.B )



**தோற்றம்** 21.09.1939

**மறைவு** 18.04.2023

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்றுமுன் தினம் (16.05.2023) செவ்வய்க்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புண்ணிய தீர்த்தக் கரையில் நடைபெற்றது. அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய கிரியைகளும் இன்று (18.05.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச்செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாக எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்)**

சாரையடி,
புலோலி தெற்கு, புலோலி.

(Cr.39757) (N-1)

என்றும் நினைவில்
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



**தோற்றம்** 23 . 06 . 1958

**மறைவு** 16 . 05 . 2023

## கலாநிதி கார்த்திகேசு திருப்பதி

**(ஓய்வு நிலை ஆசிரியர்)**

கட்டுப்பலானை, கோப்பாய் வடக்கு, கோப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு திருப்பதி நேற்றுமுன்தினம் (16.05.2023) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு இரத்தினம் அவர்களின் சிரேஷ்ட புதல்வனும் மற்றும் கந்தலிங்கம் தையல்நாயகி (கனடா) அவர்களின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சாந்தியின் அன்புக் கணவரும், பார்வதிபிள்ளை, திருமகள், ஞானபண்டிதர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கமலநாதன், சூரியகுமார், சதிஷ்குமார், சாந்தகுமார் (கனடா) மற்றும் உதயகுமார் (கனடா) மஞ்சுளா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கவி, சதா ஆகியோரின் அன்பு மாமனாரும், பரணி, ஜவனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.05.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கட்டுப்பலானை,**
**கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**

**தகவல்:**
**077 483 9305 குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்...

பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் ஏற்கனவே 'எல்' வலயத்தினுள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைபற்று மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 34 கிராம அலுவலர் பிரிவுகள் உள்வாங்கப்பட்டுள்ளன. அவற்றில் கரைதுறைபற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 8 கிராம அலுவலர் பிரிவுகளை உடனடியாக மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஒப்படைக்குமாறு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டிருந்த நிலையில், தமிழ் அரசியல்வாதிகளின் தலையீட்டையடுத்து அது ஒத்திப்போடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் புதிதாக 'ஜே' வலயம் உருவாக்கப்பட்டு அதனுள் முல்லைத்தீவின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலிருந்து 15 கிராம அலுவலர் பிரிவுகள் உள்வாங்கப்படுவதாக கடந்த வாரம் அறிவிக்கப்பட்டுள்ளது. துணுக்காய் பிரதேச செயலர் பிரிவு உள்வாங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டபோதும் அங்கு எத்தனை கிராம அலுவலர் பிரிவுகள் உள்வாங்கப்படுகின்றன எனத்தெரிவிக்கப்படவில்லை. மேலும் இதே 'ஜே' வலயத்தினுள் மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவின் 15 கிராம அலுவலர் பிரிவுகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

மகாவலி 'ஜே' வலயத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ள கிராமங்களிலுள்ள அரச மற்றும் தனியார் காணி விவரங்கள், வீதிகள், அங்குள்ள குளங்கள், வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களத்துக்குச் சொந்தமான காணிகள், முன்னெடுக்க திட்டமிடப்பட்ட அபிவிருத்திப் பணிகள் உட்பட அனைத்து விவரங்களையும் சமர்ப்பிக்குமாறு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையால் கடந்த 2ஆம் திகதி தனிச் சிங்கள மொழியில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கில் ஏற்கனவே பல்வேறு அரச திணைக்களங்களாலும் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையிலேயே மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை இந்த நகர்வை முன்னெடுத்துள்ளது. (அ-ஒ.5)

## தமிழர் தாயகமெங்கும்...

முற்பகல் 10.30 மணிக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு, 10.31 மணிக்குப் பொதுச் சுடர் ஏற்றப்படும். மு.ப. 10.32 மணிக்கு மக்கள் சுடரேற்றல் நடைபெறும். முற்பகல் 10.35 மணிக்கு மதகுருமார் மலரலஞ்சலி செலுத்துவர். தொடர்ந்து முற்பகல் 10.40 மணிக்கு முள்ளிவாய்க்கால் பிரகடனம் வெளியிடப்படும். அதன்பின்னர் முற்பகல் 10.50 மணிக்கு பொதுமக்கள் மலரஞ்சலி செலுத்துவர்.

அதேவேளை, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள் தமிழர் தாயகத்தின் பல்வேறு இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தமிழ் மக்கள் அனைவரும் இன்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் அணிதிரளவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-எ)

## கொழும்பிலும்...

நினைவேந்தல் நிகழ்வுகள் இன்று கொழும்பிலும் முன்னெடுக்கப்படும் என்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழு தெரிவித்தது.

கொழும்பு, பொரளை கனத்தை சுற்றுவட்டத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் மு.ப. 10.30 மணியளவில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கொழும்பு, காலிமுகத்திடலில் முன்னெடுக்கப்பட்டிருந்தது. (அ-எ-66)

## கடைகளை...

பிடிக்கப்படவுள்ள நிலையில், தாயகப் பிரதேசத்தில் வர்த்தக நிலையங்கள் மூடப்படவுள்ளன.

கிளிநொச்சி மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேசங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் இன்று மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-113)

## வடக்கு...

கொண்டனர். கொழும்பிலுள்ள ஜனாதிபதி செயலகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநராகத் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸும், கிழக்கு மாகாண ஆளுநராகச் செந்தில் தொண்டமானும், வடமேல் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனவும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் அரச நிர்வாக சேவையில் தேர்ச்சி பெற்ற அதிகாரியாவார். இவர் மாவட்டச் செயலர், வடக்கின் முன்னாள் ஆளுநர், சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் என முக்கியமான பதவிகளை வகித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள செந்தில் தொண்டமான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராவார். அவர் ஊவா மாகாண சபையில் அமைச்சராகவும், பதில் முதலமைச்சராகவும் செயற்பட்ட அனுபவம் கொண்டவர்.

வடமேல் மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன முன்னாள் அமைச்சராவார். அவர் மாகாண சபையிலும் பதவிகளை வகித்துள்ளார். இவர் தற்போதைய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் சகோதரராவார். (அ.எ.22.26)

## வெளிநாடு...

குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 9 பேர் ஆண்கள் என்றும் இருவர் பெண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட கிராம அலுவலர் 36 வயதுடையவர், மன்னாரைச் சேர்ந்தவர். கைது செய்யப்பட்ட ஏனையோர் யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய இடங்களைச் சேர்ந்த 31, 36, 33, 34 மற்றும் 22 வயதுடையவர்களாவர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-எ-இ)

## முள்ளிவாய்க்கால்...

நிறுவனங்கள் என அனைவரும் அன்றாட செயற்பாடுகளை நிறுத்தி நினைவேந்தவேண்டும் - இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட இனவழிப்புப் போரின் மூலம் தமிழ் மக்களுடைய உரிமைக்கான ஆயுதப் போராட்டம் 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி மௌனிக்கச் செய்யப்பட்டது. இந்த இனவழிப்புப் போரில் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் தமிழ் மக்கள் ஸ்ரீலங்கா ஆயுதப் படைகளால் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

தீர்வு என்ற பெயரில் தமிழ் மக்களது விருப்புக்கு மாறாகத் தமிழ் மக்கள்மீது திணிக்கப்பட்ட 13ஆம் திருத்தத்தையும் ஒற்றையாட்சியையும் நிராகரித்து, தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட தீர்வு வேண்டும் என்ற நிலைப்பாட்டை முன்வைத்துப் போராடியமையாலேயே தமிழ் மக்கள் இனவழிப்புச் செய்யப்பட்டார்கள்.

உரிமைக்காகப் போராடியமைக்காக இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூரவேண்டிய வரலாற்றுக் கடமை அனைத்துத் தமிழ் மக்களுக்கும் உண்டு. அவர்கள் எத்தகைய அரசியல் நிலைப்பாட்டை முன்வைத்து போராடினார்கள் என்பதும், அந்தக் கோரிக்கைகளை இறுதிவரை கைவிட மறுத்து உறுதியாக நின்றமையாலுமே இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டார்கள் என்ற வரலாற்று உண்மைகள் எமது அடுத்த சந்ததிக்குக் கடத்திச் செல்லப்படல்வேண்டும்.

இனவழிப்பு அரங்கேற்றப்பட்டு 14 ஆண்டுகள் கடந்துள்ளபோதும் தமிழ் மக்கள் 13ஆம் திருத்தத்தையும், ஒற்றையாட்சியையும் நிராகரித்து, தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை அங்கீகரிகப்பட்ட அடிப்படையிலான சமஷ்டித் தீர்வை வலியுறுத்தியே சனநாயக வழிமுறையிலான தேர்தல்கள் மூலம் ஆணை வழங்கி வந்துள்ளனர். நிறைவேற்றப்பட்ட நாளிலிருந்து கடந்த 36 ஆண்டுகள் முழுமையாக நடைமுறையில் உள்ள 13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறையில் இல்லாதது போன்று பாசாங்கு செய்து அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் கோருவதானது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாடாகும்.

ஒற்றையாட்சியை நிராகரித்து, தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தீர்வை வலியுறுத்தி மக்களை அணிதிரட்ட வேண்டிய வரலாற்றுக் கடமை முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுக்கும் ஒவ்வொரு தரப்பினருக்கும் உண்டு.

கீழ்வரும் கோரிக்கைகளுக்கு வலுச்சேர்க்கும் வகையில் வழமைபோன்று இந்த ஆண்டும் மே 18 அன்று முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இடம்பெறும் நினைவேந்தல் நிகழ்வில் ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் அணிதிரளவேண்டுமென அன்புடன் வேண்டுகின்றோம்.

தமிழ் மக்கள்மீது ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட இனப்படுகொலைக்குச் சர்வதேசக் குற்றவியல் விசாரணை நடத்தப்படல்வேண்டும். பொறுப்புக்கூறல் தொடர்பிலான எந்தவொரு உள்ளகப் பொறிமுறையையும் முற்றாக நிராகரிக்கின்றோம்.

1987ஆம் ஆண்டே இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வின் ஆரம்பப் புள்ளியாகக் கூடக் கருத முடியாது என்று, தமிழ்த் தலைமைகளால் நிராகரிக்கப்பட்டிருந்த 13 ஆம் திருத்தச் சட்டத்தை, ஒருபோதும் தமிழ் மக்களுக்கான தீர்வாகத் திணிக்கமுடியாது என்பதையும், ஒற்றையாட்சிக்குட்பட்ட எந்தவொரு தீர்வையும் நாம் முற்றாக நிராகரிக்கின்றோம்.

ஸ்ரீலங்காவின் 75 வருடத் தோல்விக்குக் காரணமான ஒற்றையாட்சி அரசியல் யாப்புக் கைவிடப்பட்டு, புதிய அரசியல் யாப்பானது தமிழ்த் தேசம், இறைமை, சுயநிர்ணய உரிமை என்பவற்றை அங்கீகரிக்கும் சமஷ்டி யாப்பாக அமையவேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படல் வேண்டும் என்பதுடன் அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படல் வேண்டும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்படுவது நிறுத்தப்படல் வேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைக் கண்டறிய சர்வதேச விசாரணை நடத்தப்படல் வேண்டும்.

இந்தக் கோரிக்கைகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில் மே 18 ஆம் திகதி வடக்குக் கிழக்கில் மக்கள் தமது வழமையான நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்தி முள்ளிவாய்க்கால் மே 18 இனப்படுகொலையை நினைவுகூரவேண்டும் என்று அழைக்கின்றோம். இன்று வியாழக்கிழமை மே18 முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவேந்தல் நிகழ்வுக்கு அனைத்துத் தமிழ் மக்களும் அணி திரள வேண்டும் என்று அழைப்பு விடுக்கின்றோம் - என்றுள்ளது. (அ-எ-26)

## சேதங்களை...

நீதிமன்றம் உத்தரவு வழங்கியுள்ளது. அதேநேரம் விக்கிரகங்கள் உடைப்புடன் தொடர்புடையவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொலிஸாருக்கு நீதிமன்றம் பணித்துள்ளது.

வெடுக்குநாறிமலையில் சிலைகள் உடைக்கப்பட்ட விடயம் தொடர்பான வழக்கு வவுனியா நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் முறைப்பாட்டாளர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முன்னிலையானார்.

வழக்குத் தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

இந்த வழக்கில் தொல்பொருள் திணைக்களம் முதன்முறையாக முன்னிலையாகி நீதிமன்றம் வழங்கிய உத்தரவை மீறி முறைப்பாட்டாளர்கள் செயற்பட்டனர் என்று தெரிவித்திருந்தனர். நேற்றும் அந்த விடயத்தைத் தெரிவித்தனர்.

தொல்பொருள் தொடர்பான இந்தப் பிரதேசத்திலே மார்ச் மாதம் இடம்பெற்ற மோசமான விக்கிரகங்கள் உடைப்பு சம்பவத்தில் தொல்பொருள் திணைக்களம் ஒரு விரலைக்கூட அசைக்கவில்லை. அந்த விடயத்தை கரிசனையில் கூட எடுக்கவில்லை. அதை மீள நிறுவும்படி நீதிமன்றம் உத்தரவை வழங்கிய பின்னரே மீள நிறுவப்பட்டது. தொல்பொருள் சேதமேற்பட்டது என்று பொய்யான புகாரை முன்வைக்கின்றனர் என்று நாம் மன்றுக்கு எடுத்துரைத்தோம்.

அந்தவிடயத்தில் இதுவரைக்கும் சந்தேகநபராக எவரையும் குறிப்பிடவில்லை. தொல்பொருள் திணைக்களம் வனவளத் திணைக்களம் போன்றவற்றால் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படுகின்ற ஒரு இடத்தில் இப்படியான விக்கிரகங்களை உடைத்தமை ஒரு விசித்திரமான விடயம் என்பதையும் கூறினோம்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நீதிவான் பொலிஸாருக்குக் கட்டளை இட்டுள்ளார். தொல்பொருளுக்கு சேதம் ஏற்பட்டால் அதன்மீது நடவடிக்கை எடுக்கமுடியும். இது நீதிமன்ற கட்டளையை மீறிச் செயற்பட்டமை தொடர்பாக இருப்பதால் அதற்கான நடவடிக்கைகளை உரியமுறையிலே எடுக்க வேண்டும் என்று தொல்பொருள் திணைக்களத்துக்கு மன்றால் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் அடையாளங்கள் சேதமாகின்ற வகையில் செயற்படாமல், சமய சடங்குகளை எளியமுறையிலே செய்வதற்குமான, எச்சரிக்கையும் முறைப்பாட்டாளர்களான எங்களுக்கு மன்றால் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (அ-எ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட பகுதியில் கறுவாச்செய்கை ஊக்குவித்தல் செயலமர்வு

யாழ்ப்பாணம் மே 18

வட பகுதியில் கறுவாச்செய்கையை ஊக்குவிக்கும் செயலமர்வு வட்டுக்கோட்டை பங்குரு முருகன் கோவில் சமூக மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்தச் செயலமர்வில் கறுவா ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜீ.ஜீ.ஜெயசிங்க பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வடக்கில் கறுவாச் செய்கையை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் தொடர்பாக விளக்க உரை நிகழ்த்தவுள்ளார்.

இதேவேளை வடபகுதியில் கறுவாச்செய்கையை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்பதற்கான செய்முறை விளக்கங்கள் வழங்கப்படுவதுடன், ஆர்வமுள்ளவர்களுக்கு கறுவாக்கன்றுகளும் இலவசமாக வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் இந்த இலவச செயலமர்வில் கலந்து கொண்டு பயனடைய முடியும் எனவும் இது தொடர்பான தகவல்கள் தேவைப்படுபவர்கள் 077 062 9013 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர் புவனகுமார் அறிவித்துள்ளனர். (ஒ-ரி)


## விசேட விலைக்கழிவு

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் யாழ். மாவட்ட விநியோக உரிமை முகாவராகிய சிவா நறுமணப் பூங்காவில், ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொருள்களை மொத்தமாக கொள்வனவு செய்யும் வைத்தியர்கள், வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

**021 222 2567**

சிவா நறுமணப்பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச் சந்திக்கு அருகாமையில்)

## வேலையாள் தேவை

எமது கால்நடை உற்பத்தி விற்பனை நிலையத்துக்கு Light Vehicles Licence (Auto) உட்பட ஆண் வேலையாள் தேவை.

**075 258 9665, 077 851 1265**
**Jaffna Egg Center**


# 'ஐப்பசியில்' நூல் வெளியீடு

ஓய்வுபெற்ற வங்கியாளரும், கவிஞருமான அழ. பகீரதனின் ஐந்தாவது கவிதைத் தொகுப்பான 'ஐப்பசியில்' நூல் வெளியீடு நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு காலையடி பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த அரங்கில் நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளரும், மறுமலர்ச்சி மன்றத்தின் தலைவருமான சு.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், நூலுக்கான அறிமுக உரையை கவிஞரும், ஆய்வாளரும், ஆசிரியருமான ந.குகபரன் ஆற்றவுள்ளார். ஆர்வலர்கள் அனைவரையும் இந்நூல் வெளியீட்டில் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ய)


## காணி விற்பனைக்கு

* யாழ்ப்பாணம் கீரிமலையில் 78 பரப்பு **(நிலப்பரப்பு)** காணி விற்பனைக்கு.
* கீரிமலையிலிருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
* கீரிமலை சிவன் கோயில் (நகுலேஸ்வரர்) இருந்து 1 KM தூரம்.
* திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
* காணியின் வடக்கு எல்லை கடல், தெற்கு எல்லை பிரதான காப்பற் வீதி முகப்பு (மாதகல் - கீரிமலை).
* ஒரு பரப்பின் விலை - பத்து இலட்சம் ரூபாய். (1000000/=)



(CS 24885) A-1

**தொடர்பு:076 911 9371**
**076 7390 413**
**077 8748 135**

## தேவை

மென்பான விற்பனைக்கு விற்பனைப் பிரதிநிதி மற்றும் அனுபவமுள்ள களஞ்சியக் காப்பாளர் தேவை.

**077 772 2215**

## மாபெரும் மலிவு விற்பனை

☆ சுப்பர் மார்க்கட் (பொருட்கள் வைக்கும்) தட்டுகள்
☆ அலுமினிய கண்ணாடி பிறேம் தட்டுகள்
☆ சுவரில் வைக்கும் கண்ணாடி தட்டுகள்
☆ உடுப்புகள் கொளுவும் (HANGER & STAND
☆ உடுப்புகள் (Ladies) 40 % கழிவு

தொடர்புகளுக்கு:
**077 117 0544 / 070717 7544**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 18.04.2023 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் சின்னத்தம்பி இராமலிங்கம்

(மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில் தர்மகத்தா)

தோற்றம்
29 . 10 . 1933



மறைவு
18 . 04 . 2023

அன்னார் நோயுற்ற வேளையில் பல வழிகளிலும் உதவி புரிந்தோர்க்கும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அன்புள்ளங்களுக்கும் தொலைபேசியூடாகவும் சமூக வலைத்தளங்களூடாகவும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், அஞ்சலியுரை வழங்கியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்

அன்னாரின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் இன்று (18.05.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் வீதி
மீசாலை வடக்கு, மீசாலை.

(CS/8805)AH-1

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.